கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Elders Home Complex, Kandy Road, Kaithady, Jaffna

Our Ref:- Np/15/AD2/CI - 2015 Your Ref:- 25.05.2015

சுற்றறிக்கை 02/2015

சகல இரண்டாம்படிக் கூட்டுறவுச்சங்கங்களின்
தலைவர்கட்கு.

இரண்டாம்படி கூட்டுறவுச்சங்கங்களினது இயக்குனர்கள் சங்கம் தொடர்பான விடயங்களுக்கு கலந்து கொள்வதற்கான இணைந்த படிகளும் பிரயாணப்படிகளும்.

மேற்படி வடக்குமாகாணத்தில் உள்ள இரண்டாம்படி கூட்டுறவுச்சங்கங்களின் இயக்குனர், இயக்குனர் சபைக்கூட்டங்களுக்கும்,சங்கம் தொடர்பான ஏனைய கடமைகளுக்கும் கலந்துகொள்ளும் போது உறுப்பினர்களின் பிரயாணப்படிகளும்,இணைந்த படிகளும் சுற்றறிக்கை 01/2013ன் 3(1)ல்குறிப்பிட்டுள்ளதற்கு மேலதிகமாக பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது .

இரண்டாம்படிக் கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குனர் ஒருவர் குறித்தசங்கக் கடமையை நிறைவேற்றும் பொருட்டு வேறுதிணைக்களங்களுக்கோ, வேலைத்தளங்களுக்கோ பிரயாணம் செய்யும் போது அவருக்கு ஏற்படும் உணவு தங்குமிட செலவு, பிரயாணச்செலவு ஏனைய அவசர செலவுகள் சம்பந்தமான செலவுகளை மீளளிப்பதற்கான கொடுப்பனவு பிரயாணப்படி எனப்படும்.

கடமையின் நிமித்தம் பிரயாணம் செய்யும் இயக்குனர் தனது அலுவலகத்திருந்து செல்லுதல் வேண்டும். ஆனால் செல்லும் இடம் வதிவிடத்துக்கு கிட்டியதாக இருக்கும்பட்சத்தில் வதிவிடத்திலிருந்து செல்லுதல்வேண்டும். அதாவது மிகக்கிட்டிய தூரத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

தூரம் :- பிரயாணத்தூரம் 7மைல் அல்லது12கி.மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.(வதிவிடம்.அலுவலகம் எது கிட்டவோ அதிலிருந்து பிரயாணம் ஆரம்பித்ததாக இருத்தல் வேண்டும்.)

நேரம் :- கடமைப்பிரயாணத்தின்போது ஏற்படும் நேரத்துக்கு ஏற்ப இணைந்தபடி கணிப்பீடு செய்தல் வேண்டும்.

இயக்குனர்களுக்கான இணைந்த படி 400 ரூபா (முழு இணைந்தபடி)

6மணித்தியாலத்துக்கு மேற்படாத நேரத்துக்கு இணைந்தபடி வழங்கமுடியாது.
6 – 12 மணித்தியாலத்துக்கு - இணைந்தபடியின் 50 வீதம்
12 – 24 மணித்தியாலத்துக்கு - இணைந்தபடியின் 100 வீதம்
24 மணித்தியாலத்துக்கு மேற்படின் இணைந்தபடியின் தொகைக்கு மேலதிகமாக 25 வீதம் விசேடபடியாக வழங்கப்படும்.
இத்துடன் பொதுப்போக்குவரத்துக்கான பிரயாணகொடுப்பனவையும் பெற்றுக்கொள்ள முடியும்.
இக் கொடுப்பனவு 01.06.2015 திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதுடன், சுற்றறிக்கை 01/2013ன் 3(1)பிரிவு இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.ஆரம்பகூட்டுறவுச்சங்கங்களுக்கு பொருந்துவதாகவே அமையும்.

திருமதி. மதுமதி வசந்தகுமார்.
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் (வ.மா).

பிரதி - 1. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் -
யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/வவுனியா/முல்லைத்தீவு/மன்னார்.
2. நிறுவனத்தலைவர் வடமாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனம் வவுனியா.

CCD & RCS – 021 2057063 Asst. Commissioner – 021 2057064 Accountant – 021 320 2190
Gen – 021 2057062 Fax – 021 753 8366 E-mail :- ccdnp@mail.com